©
தமிழ்நாடு அரசு
2022

# தென்காசி மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

தென்காசி, ஜூன் 28, 2022
ஆனி 14, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு-2053 [எண் 6

## உள்ளாட்சித்துறை அறிவிக்கை

(ந.க.எண்.ஈ3/13564/2022, நாள்.24.06.2022)

### பொது அறிவிக்கை
### தென்காசி நகராட்சி

(ந.க.எண்.632/2022/அ1 , நாள். 26 .05.2022)

தென்காசி நகராட்சியில் 01.04.2022 முதல் அமுலாக்கப்படும் பொது சொத்து வரி சீராய்வு மற்றும் திருத்தியமைக்கப்படும் மண்டல அடிப்படை மதிப்பு குறித்த அறிவிக்கை

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அட்டவணை (4)ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் படியும் தமிழக அரசின் அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.30.03.2022 ன் படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்படியும், தென்காசி நகராட்சியில் 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ள தென்காசி நகர்மன்ற அவசரக் கூட்டத்தீர்மானம் எண்.22 நாள் 08.04.2022 ன் படி அனுமதி வழங்கி தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில் கீழ்க்காணும் விபரப்படி மண்டல மதிப்பு நிர்ணயம் செய்து அதன் அடிப்படையில் சொத்துவரி நிர்ணயிக்க பொதுமக்கள் அறியும் வகையில் 13.04.2022 அன்று தினமணி, தினச்சுடர், இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய மூன்று தினசரி நாளிதழ்களில் சொத்துவரி சீராய்வு குறித்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் தெரிவிக்க விளம்பரம் செய்யப்பட்டு ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் கோரப்பட்டது. மேற்படி ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க 13.04.2022 முதல் 20.05.2022 முடிய கால அவகாசம் கொடுக்கப்பட்டது. எவ்வித ஆட்சேபனை மனுக்களும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் வரப்பெறவில்லை. ஆகவே தென்காசி நகர்மன்ற அவசர கூட்டத்தீர்மான எண்.46, நாள் 26.05.2022ல் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி 01.04.2022 முதல் கீழ்க்காணும் விபரப்படி புதியதாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மண்டல மதிப்புகளின் அடிப்படையில் ஊர்ஜிதம் செய்து சொத்துவரி பொதுச்சீராய்வு மேற்கொள்ளப்படும்.

# சொத்துவரி

| வ.எண் | தற்போதைய மண்டலம் | மண்டல மதிப்பு ரூ.பை | புதிதாக நிர்ணயிக்கப்படும் மண்டல மதிப்பு | | |
|---|---|---|---|---|---|
| | | | பரப்பளவு (ச.அடி/உபயோகம்) | உயர்வு செய்வதற்கான காரணி | புதிய மண்டல மதிப்பு |
| 1 | A | 1.30 | குடியிருப்பு | | ரூ.பை |
| | | | < = 600 | 1.25 | 1.65 |
| | | | 601-1200 | 1.50 | 1.95 |
| | | | 1201-1800 | 1.75 | 2.30 |
| | | | > 1800 | 2.00 | 2.60 |
| | | 2.60 | தொழிற்சாலை | 1.75 | 4.55 |
| | | 3.90 | வணிகம் | 2.00 | 7.80 |
| | | 1.95 | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | 1.75 | 3.45 |
| 2 | B | 1.10 | குடியிருப்பு | | |
| | | | < = 600 | 1.25 | 1.40 |
| | | | 601-1200 | 1.50 | 1.65 |
| | | | 1201-1800 | 1.75 | 1.95 |
| | | | > 1800 | 2.00 | 2.20 |
| | | 2.20 | தொழிற்சாலை | 1.75 | 3.85 |
| | | 3.30 | வணிகம் | 2.00 | 6.60 |
| | | 1.65 | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | 1.75 | 2.90 |
| 3 | C | 0.80 | குடியிருப்பு | | |
| | | | < = 600 | 1.25 | 1.00 |
| | | | 601-1200 | 1.50 | 1.20 |
| | | | 1201-1800 | 1.75 | 1.40 |
| | | | > 1800 | 2.00 | 1.60 |
| | | 1.60 | தொழிற்சாலை | 1.75 | 2.80 |
| | | 2.40 | வணிகம் | 2.00 | 4.80 |
| | | 0.75 | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்கள் | 1.75 | 1.35 |

1) மேலும் மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படுகிறது.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படுகிறது.

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படுகிறது.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படுகிறது.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படுகிறது.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படுகிறது.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்படுகிறது. மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்படுகிறது.

**II. வருடாந்திர சொத்துவரி உயர்வு:—**

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி உயர்வு செய்யப்படும்.

மேலும், தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிடப்பட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், வசூலிக்கப்படும் சொத்துவரியில் உள்ளடக்கிய இனங்களுக்கான கூறுகள் (Component of Property Tax – General Purpose + Scavenging + W.S & Drainage + Lighting) கீழ்க்கண்டவாறு ஏற்கனவே உள்ளவாறு நிர்ணயிக்கப்படுகிறது.

| பொது பயன்பாடு | சுகாதாரம் | தெரு விளக்கு | குடிநீர் (ம) வடிகால் | கல்வி வரி | நூலக வரி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 3% | 1% | 2% | 6% | 2.50% | 10% (சொத்துவரியில்) | 14.50% |

மேற்கண்ட கூறுகளில் கல்வி வரி தனியாக வருடாந்திர மதிப்பில் கணக்கிடப்படும் மேற்கண்டவாறு திருத்தியமைக்கப்படும் அனைத்து இனங்களும் 01.04.2022 முதல் அமலாக்கம் செய்யப்படுகிறது.

(ந.க.எண்.632/2022/அ1)

**சூ.மு.பாரிஜான்,**
*நகராட்சி ஆணையாளர்,*
*தென்காசி.*

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் மதுரை அரசு கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.